
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


| மலர் 1 | செப்டம்பர் 1988 | இதழ் 9 |
|---|---|---|


பரிசுத்த



வேதாகமம்


வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30 — 11-00—காலை ஆராதனை

,, : ,, 11-00 — 12-00—ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15 — 8-30—மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15 — 8-30—ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)

புதன் : மாலை 5.30 — 7-00—சகோதரிகள் ஐக்கியக் கூட்டம் (ஒருவாரம் விட்டு ஒரு வாரம்)

வியாழன் : மாலை 7-15 — 8-30—வேதாகம ஆய்வு

சனி : மாலை 7-00 — 9-00—மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


மரணம் மூன்று வகை 1

பரம நகரத்திற்கு போகும் வழி 7

உங்கள் மனம் புதிதாகிறதினாலே 15

சோதனைகளை எதிர்த்துப் போராடுதல் 21

வாழத் தகுந்த வாழ்க்கை 25

கோணலை நிமிர்த்துவோம் 27

# THIRUMARAI AASAAN

**Editor:**
**J. C. CHOATE**

**Managing Editor:**
**E. Z. SELVANAYAGAM**

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 1 September 1988 Issue 9


ஆசிரியவுரை

## மரணம் மூன்று வகை

மரணத்தைப் பற்றி சிந்திக்கவே மனிதன் பயப்படுகிறான். காரணம்: அவனுடைய சிந்தனையில் சாவு என்றால் இந்த உலகத்தை விட்டுப் போய்விடுதல் என்கிற கருத்தே மேலோங்கி நிற்கிறது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் என்றென்றைக்கும் பிரிந்துபோய்விடுவோம் என்ற பயம் பிடித்துக் கொள்ளுகிறது. சாவு என்றதும் அதனோடு தொடர்புள்ள நோவு, வேதனை, துன்பம், உயிரிழப்பு ஆகிய தொல்லைகள் நம் சிந்தனையை நிரப்பிக் கொள்ளுகிறது.

மரணம் சில வேளைகளில் நோய் வாய்ப்பட்ட பிறகும், சில வேளைகளில் திடீரென்றும் சம்பவிக்கிறது. அதற்கு இளைஞர், முதியவர் என்ற பாரபட்சமோ, பச்சாதாபமோ கிடையாது. ஏழை, பணக்காரன், நல்லவன், கெட்டவன் என்கிற பாகுபாடு இல்லாமல் அனைவரையும் ஏதாவது ஒரு காலகட்டத்தில் வந்து அடைகிறது. அதன் வருகை திடீரென்றும், எதிர்பாராத விதத்திலும், எவருடைய விருப்பு, வெறுப்புகளையும் பொருட்படுத்தாது இறுதி முடிவாகவும் நிகழ்கிறபடியால் அது எவரையும் பயப்படுத்தி விடுகிறது.

இப்படி மரணம் பற்றிய பயங்கர சிந்தனைகள் மனிதருக்கு அச்சத்தை விளைவித்த போதிலும் மரணத்தினால் மனிதனுக்கு ஏற்படும் சில நன்மைகளும் உண்டு. ஒருவன் மெய் வாழ்வு வாழ வேண்டும் என்றால் சாகவேண்டும் என்கிற உண்மை பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். ஆனால் உண்மை. இது இயற்கையின்

சட்டம் மண்ணில் முளைத்துக் கிளம்பும் எந்த ஒரு தாவரத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு புதிய செடி உற்பத்தியாக வேண்டுமென்றால், அந்தக் குறிப்பிட்ட செடியின் விதை அல்லது தானியம் மண்ணுக்குள் புதைக்கப்பட வேண்டும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அந்த விதியின்படி 'ஒருவன் கிறிஸ்துவுக்குள் புது வாழ்வு பெற வேண்டுமானால் பாவத்துக்குச் செத்தே ஆகவேண்டும். பவுல் அப்போஸ்தலன் இந்தக் கருத்தை, ரோமருக்கு எழுதின நிருபம் 6-ஆம் அதிகாரம் 3-8 வசனப்பகுதியில் கீழ்வருமாறு விளக்குகிறார். 'ஒருவன் பாவத்துக்குச் செத்து, கர்த்தருடைய அடக்கத்தின் சாயலான தண்ணீர் முழுக்கினால் அடக்கம் பண்ணப்பட்டு, புதிய ஜீவனுள்ளவனாய் நடமாட கிறிஸ்துவுடனே கூட எழுந்திருக்கிறான்' என்கிறார்.

அடுத்து, சரீர மரணத்திலும் இதுவே உண்மை. ஒருவருடைய சரீர மரணம் முன்பின்னாக இருக்கலாம் ஆனால் சரீர மரணத்தோடு வாழ்க்கை முடிந்து போவதில்லை. அதற்குப் பிறகு ஒரு வாழ்க்கை உண்டு என்று வேதாகமம் கூறுகிறது. இந்தக் கருத்துக்கு உடன்படாத மக்கள் இன்று இருப்பதைப் போலவே கொரிந்து பட்டணத்திலும் சிலபேர் இருந்திருக்கிறார்கள் போலும். அவர்களுக்குச் சொல்லப்பட்ட விளக்கத்தை கவனியுங்கள். 'ஆகிலும் மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள் என்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே,

நீ விதைக்கிற போது, இனி உண்டாகும் மேனியை விதையாமல் கோதுமை அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய்.

அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார். விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்.

எல்லா மாம்சமும் ஒரே விதமான மாம்சம் அல்ல. மனிதருடைய மாமிசம் வேறே, மிருகங்களுடைய மாமிசம் வேறே, மச்சங்களுடைய மாமிசம் வேறே, பறவைகளுடைய மாமிசம் வேறே.

வானத்திற்குரிய மேனிகளும் உண்டு, பூமிக்குரிய மேனிகளும் உண்டு; வானத்திற்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே

இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும் அழிவில்லாததாய் எழுந்திருக்கும் கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும் பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரமும் உண்டு. ஆவிக்குரிய சரீரமும் உண்டு. 1 கொரி 15:35-44.

மனிதனுடைய சரீரத்தைப் பற்றி இன்னொரு உண்மை என்னவெனில், அது நாளுக்குநாள் வளர்ந்து பின்னர் தேயும் தன்மையுடையது. பிறந்தது முதல் இறக்கும் வரை, மனிதனுடைய சரீரம் மாற்றம் அடைந்துகொண்டு வருகிறது. முதுமையடையும் போது கண்ணொளி மங்கி, கேட்கும் திறன் குறைந்து, முடி நரைத்து, தோல் சுருங்கி இப்படி பல மாற்றங்கள் உண்டாகின்றன. இந்த நிலையை உணர்ந்து, ஆனபடியால் நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும் உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.

மேலும் காணப்படுகிறவைகளையல்ல காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரி 4:16-18) என்கிறார் பவுல். இதன் கருத்தென்ன? ஒரு கிறிஸ்தவன் சரீரம் முதுமையடைவதைப் பற்றியோ அதனால் ஏற்படும் பலவீனங்களைப் பற்றியோ முணுமுணுக்காமல் ஆவியிலே வளர்ச்சி அடைந்து காலம் வரும் போது இந்த சரீர வாழ்வைக் களைந்தெறிந்து விட்டு, கர்த்தரோடு என்றென்றும் வாழத்தக்கதாக புதிய ஜீவனுக்குள் பிரவேசிப்போம் என்கிற நம்பிக்கையோடு வாழ்கிறான் என்பதாகும்.

பவுல் அடியார் வாழ்ந்த காலத்தில் கூட ஒரு சில கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுதல் இல்லை என்று நம்பிக்கொண்டிருந்தார்கள் என்று தெரிகிறது. அதற்குப் பதில் அளிக்கும் வகையில் "மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே"

கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா உங்கள் விசுவாசமும் விருதா.

மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினார் என்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சி சொன்னதினாலே தேவனுக்காகப் பொய்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோம்.

மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும் நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்கள்.

இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்போம்.

கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரையடைந்தவர்களில் முதல் பலனானார்' என்கிறார் 1 கொரி 15:13-20.

ஆகையால் ஒரு மெய்க் கிறிஸ்தவன் மேற்சொன்ன காரியங்களை நம்பி நடப்பானானால் வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களை பொறுமையோடு சகித்துக் கொள்வான். இதை நம்பாதவனுடைய நிலை என்ன? அவனுடைய வாழ்க்கை துக்கமும், சோகமும் நிறைந்ததாக இருக்கும். ஏனெனில் இந்த வாழ்க்கை முடிந்தபிறகு வேறெந்த நம்பிக்கையும் இல்லையே.

இன்னொரு காரியத்தைக் கூட நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது மரித்தவர்கள் அனைவருமே உயிர்த்தெழுவர் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். சிலர் இந்த உண்மையை ஏற்றுக்கொள்வதில்லை. ஏற்றுக்கொண்ட பலரும் கூட இதற்கான ஆயத்தங்களைச் செய்யாமல் அசட்டையாக இருக்கின்றனர். அதனால் அது நடக்காது என்ற பொருளா? இல்லை நிச்சயமாக நடக்கும். 'இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனென்றால் பிரேதக் குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்.

அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்' என்று இயேசு சொல்லுகிறார். யோவான் 5:28, 29. பின் எப்படிப் பொய்யாகும்?

மரணத்தைப் பற்றி மனிதர் மத்தியில் பலவிதமான கருத்துக்கள் இருந்தபோதிலும், வேதாகமம் மூன்று வகையான மரணத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. அவைகளைப் பார்ப்போம்.

1. ஒருவன் கிறிஸ்தவனாகும்போது, பாவத்துக்குச் சாகிறான். பாவத்துக்குச் சாவது என்றால் பாவத்துக்காக மெய்மனஸ்தாபப்பட்டு அதை அறவே விட்டு விடுவதாகும். மனிதன் தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்ப வேண்டும் என்று வேதாகமம் பல இடங்களில் கூறுகிறது. அப் 17:30; லூக் 13:3. பின்னர் தேவனுடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்படிந்து திருமுழுக்கும் பெற்றுப்

பாவங்கள் கழுவப்பட்டு புதிய மனிதன் ஆகிறான். அப் 22:16 யோவான் இதைப் புதிய பிறப்பு என்கிறான். யோ. 3:3-5 மேலும் 2 கொரி 5:17-ல் 'ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின, கவனியுங்கள்' ஒருவன் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக இருக்கிறான். அப்படியானால் ஒரு கேள்வி: கிறிஸ்துவுக்குள் ஒருவன் எப்படி பிரவேசிக்க முடியும்? திருமுழுக்கின் மூலமாக ரோமர் 6:3, 4; கலா 3:26, 27 ஆகிய வசனங்களைப் படியுங்கள். அப்படியானால் திருமுழுக்குப் பெறுவதற்குத் தேவையானது என்ன? கர்த்தருக்குக் கீழ்படிதல் அல்லது பாவத்துக்காக மரித்தல், அல்லது தண்ணீரில் அடக்கம். இதை ஒருவன் நிறைவேற்றும் பொழுது ஒருவன் கிறிஸ்துவுக்குள் ஆன்மீக வாழ்வு பெறுகிறான். ஆகவே நித்திய வாழ்வு அடைய வேண்டும் என்று விரும்புகிற வயது வந்தோர் அனைவரும் இந்த மரணத்தை விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஆவிக்குரிய வாழ்வை இந்த உலகத்திலும் மறு உலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியாது.

2. அடுத்து சரீர மரணம்: எபிரேய நிருப ஆசிரியர் 'ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும் மனிதருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே...' (எபி. 9:27) என்கிறார். யாக்கோபு இதைப் பற்றிக் கூறும்போது "உங்கள் ஜீவன் எப்படிப் பட்டது? கொஞ்சக் காலம் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போல் இருக்கிறதே" என்கிறார் யாக் 4:14 "ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாய் இருக்கிறான் என்கிறார். யோபு 14:1 இவர்கள் கூறுகிற உண்மை என்ன?

ஒருவன் தேவனுடைய பிள்ளையோ இல்லையோ மரணம் சம்பவிப்பது நிச்சயம். யாக் 2:26ன்படி மனிதனுடைய ஆவி பிரிந்து தன்னைத் தந்த தேவனிடத்துக்கும் சரீரம் தான் எடுக்கப்பட்ட மண்ணுக்கும் திரும்புகிறது. பிர. 12:7

3. இறுதியானது நித்திய மரணம்: இதைப்பற்றி யோவான் தனது வெளிப்பாட்டில் 'அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் எவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்.' என்று கூறுகிறார் (வெளி 20:14, 15) மேலும் அவர் கூறுவது 'பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும் அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்' வெளி 21:8 இதைத்தான் ஆவிக்குரிய மரணம் அல்லது நித்திய

மரணம் என்பர். அதாவது இம்மரணத்தின் மூலம் ஒருவன் காலாகாலத்துக்கும் கர்த்தரிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பான். ஆனால் ஆத்மா அழிந்து போவதில்லை. இந்த மரணம் இறுதியானதும் தவிர்க்க முடியாததும் ஆகும். தேவன் நமக்கு எல்லாருக்கும் தெளிந்த புத்தியைக் கொடுத்து இப்படிப்பட்ட மரணத்துக்கு விலகியிருக்கவும் இந்தக் கொடுமைகள் நிறைந்த இடத்துக்குப் போகாமல் தப்பித்துக் கொள்ளவும் கிருபை செய்வாராக!

பிரியமானவர்களே! மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் மேற்சொன்ன மூன்று மரணங்களில் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளையோ சந்திக்க வேண்டி வரும். ஆகவே அவைகளைச் சந்திக்க ஆயத்தமாவோம். ஒரு முறை நாம் பாவத்துக்குச் செத்து கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் புது வாழ்வைப் பெற்றுக்கொண்டால் சரீர மரணத்தைப் பற்றி நாம் பெரிய அளவு கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் பாவத்துக்குச் செத்து கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் சரீர மரணத்துக்குப் பிறகு என்றென்றும் கர்த்தரோடு வாழ்வதற்கு நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்டவர்களுக்கு நித்திய மரணமாகிய இரண்டாம் மரணம் கிடையாது வெளி 2:11 'அதனாலன்றோ பவுல் பின்வருமாறு கூறி தேவனுக்கு நன்றி கூறுகிறார்.' அழிவுள்ளதாகிய இது அழியாமையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையும் தரித்துக் கொள்ள வேண்டும்.

அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.

மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம். பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் 1 கொரி 15-53-57.

ஜே. ஸி. சோட்

## கிறிஸ்தவ நன்னெறிகளில் சில.

1. ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள்
2. திடனற்றவர்களைத் தேற்றுங்கள்
3. பலவீனரைத் தாங்குங்கள்
4. எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்
5. தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்
6. எல்லாருக்கும் எப்போதும் நன்மை செய்ய நாடுங்கள்
7. எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள்
8. இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்

# பரம நகரத்துக்குப் போகும் வழி

ஊட்டி போன்ற மலைப் பாங்கான நகர்களை பார்க்கவரு உல்லசாப்பயணிகளைத் தாங்கிவரும் பேருந்துகளில் சில விபத்தில் சிக்கி கொண்டதாகப் செய்தித்தாள்களில் அடிக்கடி வாசிக்கிறோம். பேருந்து ஓட்டுநர்கள் பலருக்கு மலைப் பாதையில் உள்ள நெளி சுளுவுகள், வளைவுகள் பற்றி சரியாகத் தெரிவதில்லை. மழைக்கால களிலும் மூடுபனி நாட்களிலும் வளைவுகள் பற்றிய எச்சரிக்கை பலகைகளை சரிவர பார்க்கமுடியாமல் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகின்றனர்.

அதுபோல தேவனுடைய பரம நகருக்குப் போகிற பாதை தெரியாமல் பல மக்கள் அலைமோதிக் கொண்டு அங்கும் இங்கும் அ... கின்றனர். எப்படியொரு விவேகமுள்ள ஓட்டுநர் பாதையின் வ... படத்தை நன்கு கவனித்து ஓட்டுவாரானால் குறிக்கப்பட்ட இடத்து சிரமமில்லாமல் போய்ச் சேரலாமோ அது போன்று பரம நகரு... போக வாஞ்சிக்கும் பூலோக வாசிகள் கர்த்தர் நமக்குத் தந்துள்ள வேத புத்தகத்தை வாசித்து தியானித்துக் கீழ்ப்படிந்து நடந்த... பரம நகரருக்கு பத்திரமாக போய்ச்சேரலாம்.

இந்த அற்புதமான தேவனுடைய பரம நகருக்குப் போக ... வாசிகளின் தந்தையாகிய ஆபிரகாமே விரும்பியிருக்கிறார் என்... அந்தப் பரம நகரின் மேன்மையை நீங்களே உணர்ந்து கொள்ளலா... எபி 11:10-ல் 'தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களு... நகரத்துக்கு அவன் காத்திருந்தான்' என்று கூறுகிறது. அவர் மட்டும... மகன் ஈசாக்கும், அவன் பேரன் யாக்கோபும் கூட அதில் பிரவேசிக்க ஆவலாக இருந்தார்கள். ஆனால் அவர்களால் அடையக்கூடா... போயிற்று. 'இவர்கள் எல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட... களை அடையாமல்.... அதையல்ல அதிலும் மேன்மையான ...ம தேசத்தையே விரும்பினார்கள். ஆகையால் தேவன் அவர்களுடைய தேவன் எனப்பட வெட்கப்படுகிறதில்லை. அவருக்கு ஒரு நகரத்... ஆயத்தம் பண்ணினார். 'எபி. 11: 13, 16.

இப்படி முற்பிதாக்கள் எல்லாம் முயன்றும் பெற முடியாத ... சிலாக்கியத்தை இத் தலைமுறையின் மக்களாகிய நாம் அடையும்படி ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்பது எவ்வளவு அருமையான ... என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். 'இவர்கள் எல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணமாகாதபடிக்கு விசேஷித்த நன்மையான தொன்றை நமக்கென்று முன்னதாக நியமித்திருக்கிறார்' எபி 11:39, 40 இவர்கள் நமக்காக அங்கே காத்திருக்கிறார்கள். தேவன் நம்மீது காட்டும் அக்கறையைப் பாருங்கள்!

கிறிஸ்து அந்தப் பரம் நகரத்துக்குச் செல்லும் வழியைக் காண்பிக்கிறார். அந்த அற்புதமான தேவனுடைய நகரத்துக்குச் செல்லும் பாதையை கீழ்வரும் வசனங்களின் மூலமாக நமக்குக் காட்டுகிறார். 'என் பிதாவின்வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கும் இடத்திலே நீங்களும் இருக்கிறபடி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்' யோவான் 14; 2, 3.

இயேசு தான் அங்கே இருப்பேன் என்று சொல்லியிருக்கிறபடியால், அங்கே சமாதானமும், இளைப்பாறுதலும், நிம்மதியும் இருக்கும், என்று நாம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். இப்போதும் நமது ஆண்டவர் அந்தப் பரம நகரத்துக்கு வரும் அனைவருக்கும் போதிய சௌகரியங்களும் இடமும் இருக்கும்படி அந்தப் பரம நகரத்தை ஒழுங்கு படுத்திக்கொண்டிருக்கிறார்.

ஆத்துமாக்கள் வாசம் செய்யப் போகும் இந்தப் பரம நகரம் எப்படி இருக்கும் என்று நமக்குத் தெளிவாக விளக்கப்படவில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு சமயம் மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டார் என்றும் ஆனால் அங்கே அவர் கண்டதைச் சொல்வது அவருக்கு நியாயமாகப்படவில்லையென்று அவர் கருதினாலும் ஒரு காரியத்தை அவர் சொல்லுகிறார். கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் என்றும் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன். தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு அது அதிக நன்மையாக இருக்கும் என்றெல்லாம் கூறுகிறார். பிலி. 1: 21, 23 ஒரு இடத்தைப் பார்த்து விட்டு வந்தவர் அதைப்பற்றி நமக்கு ஒன்றும் சொல்லவில்லை என்றாலும் அவர் அவ்விடத்துக்குப் போவது எனக்கு அதிக நன்மையாக இருக்கும் என்று சொல்வாரானால் அதன் அர்த்தம் என்ன? அந்த இடம் தற்போது உள்ள இடத்தைக் காட்டிலும் சிறந்தது என்று நமக்குப் புரியுமல்லவா?

இவர் அல்லாமல் அப்போஸ்தலன் யோவானும் இப்பரம நகரத்தின் காட்சிகளைக் காணும் வாய்ப்பை ஓரளவுக்குப் பெற்று வர்ணிக்கிறார். 'யோவானாகிய நான் புதிய எருசேலமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி வரக் கண்டேன். அதுதன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியை போல ஆயத்தமாக்கப் பட்டிருந்தது.

மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ் சத்தத்தைக் கேட்டேன். அது இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய

வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார் வெளி 21: 2,3 என்கிறார். மேலும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அந் நகரத்தின் மேன்மையைப் பற்றிக் கூறுகிறார் அதன் பிரகாரம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப் போலவும் பளிங்கின் ஒளி உள்ள வச்சிரக் கல்லைப் போலவும் இருந்தது. அதன் மதில்கள் வச்சிரக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னாக இருந்தது. நகரத்தின் மதில்களின் அஸ்திவாரங்கள் சகல விதமான இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. பனிரெண்டு வாசல்களும் பனிரெண்டு முத்துக்களாயிருந்தன. நகரத்தின் வீதி தெளிவுள்ள சுத்தப் பொன்னாயிருந்தது. நகரத்துக்கு வெளிச்சம் கொடுக்க சூரியனும் சந்திரனும் தேவைப்படவில்லை. ஏனெனில் தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசித்தது. ஆட்டுக் குட்டியானவரே அதன் விளக்கு. அங்கே மரணமோ துக்கமோ கண்ணீரோ வியாதியோ கிடையாது எல்லாம் இன்பமயம். யோவான் பார்த்தது கொஞ்சம் தான். அதுவே இவ்வளவு மேன்மையாக இருக்குமானால் முழுவதையும் சுற்றி உலாவி அதில் வாசம் பண்ணும் போது எவ்வளவு சுகமாக இருக்கும் எண்ணிப் பாருங்கள்.

**இந்த பரம நகரத்திற்கு 'விசுவாசம் மாத்திரம்' என்னும் பாதையில் சென்றால் அடைய முடியாது.**

அநேக மக்கள் 'விசுவாசம் மாத்திரம்' என்னும் பாதையில் சென்று இப் பரம நகரத்தை அடைய முடியும் என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள், 'அதை அறிந்த பரிசுத்த ஆவியானவர் யாக்கோபு மூலமாய்க் கூறுகிறதைக் கவனியுங்கள்' என் சகோதரரே! ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டு என்று சொல்லியும் கிரியையில்லாதவனானால் அவனுக்குப் பிரயோசனம் என்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? என்று கேள்வியை எழுப்புகிறார், அந்தக் கேள்விக்கு அவரே பதில் சொல்லுகிறார். 'அப்படியே விசுவாசமும் கிரியைகள் இல்லாமலிருந்தால் தன்னில் தானே செத்ததாக இருக்கும்' வ. 17. இந்தக் காரியத்தை இத்தோடு விட்டு விடாமல் வ. 20 ல் வீணான மனுஷனே கிரியை இல்லாத விசுவாசம் செத்தது என்று நீ அறியவேண்டுமோ? என்று கேட்டு விட்டு ஆபிரகாமின் விசுவாசம் பூரணப்பட்டதைக் கீழ் வரும் வசனங்களில் சொல்லிச் சுட்டிக் காட்டுகிறார். ஆதலால் மனுஷன் **விசுவாசத்தினாலே மாத்திரமல்ல** கிரியையினாலும் நீதிமானாக்கப்படுகிறான் என்று நீங்கள் காண்கிறீர்களே என்று முடிக்கிறார் 2:21

இந்த ஒரு இடத்தில் மட்டும்தான் **விசுவாசத்தினாலே மாத்திரமல்ல** என்ற சொற்றொடர் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. நாம்

இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசம் மட்டும் போதும் என்ற கூற்றுத் தவறானது என்பதை நமக்குத் தெளிவுப்படுத்துவதே இதன் நோக்கம். இந்த விஷயத்தில் இயேசுகிறிஸ்து நமக்குக் காட்டியுள்ள முன்மாதிரியைக் கவனியுங்கள். அவர்குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்.

அவர் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணமாகி எபி 5:8-9 என்று சொல்லப்படுவதிலிருந்து நாமும் கூட வெறும் விசுவாசத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் அவருக்குக் கீழ்ப்படிந்து நித்திய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தெளிவாக விளங்குகிறதல்லவா? இப்பொழுது சொல்லுங்கள் நீங்கள் தேவனுடைய பரம நகரத்தை அடைவதற்கு இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றப் போகிறீர்களா? அல்லது 'விசுவாசம் மாத்திரம்' என்று கூறி மக்களைத் திசை திருப்பும் வஞ்சகப் பாதையில் சென்று ஏமாந்துப் போகப் போகிறீர்களா?

**சன்மார்க்க வாழ்க்கை நெறி என்னும் பாதை இந்தப் பரம நகரத்துக்கு இட்டுச் செல்லும் பாதை அல்ல.**

நல்லொழுக்கமும், உண்மையும், உத்தமும், தேவபக்தியும் மனச்சாட்சியும் உள்ள பல சான்றோர்கள் இப் பரம நகரத்துக்கு செல்லும் பாதை விஷயத்தில் வஞ்சிக்கும் உபதேசத்துக்குச் செவிசாய்த்து ஏமாந்து போகிறார்கள் என்று விசனத்தோடு குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஏனெனில் அவர்களுடைய சன்மார்க்கமும் மற்றும் இதர பக்திக்குரிய வாழ்க்கையுமே தங்களுக்கு இரட்சிப்பை ஈட்டுத் தரும் என்று தவறாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தயவு செய்து அப்போஸ்தலர் 10-ம் அதிகாரத்தைத் திருப்பி 1, 2 வசனங்களைக் கவனமாய் வாசித்துப் பார்க்கவேண்டும். அதில் சொல்லப்பட்டிருக்கிற நூற்றுக்கதிபதி, இன்றைய நாட்களிலே சன்மார்க்கவேஷம் போட்டுக்கொண்டு திரிகிற எத்தனையோ போலிகளை விடச் சிறந்தவர் என்று துணிந்து கூறலாம். ஆனால் அவர் இரட்சிப்படையாத நிலையில் தான் இருந்திருக்கிறார் என்பதைக் கவனித்தீர்களா? அவருடைய வாழ்க்கையைக் கவனியுங்கள்; 1. அவன் தேவபக்தியுள்ளவன். 2. தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்குப் பயந்திருந்தான். 3. ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து வந்தான். 4. எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். (வ. 2.) வேதம் அவரைப் பற்றி இப்படிப் பலமான நற்சான்று வழங்கிய போதிலும் அவருக்கு இந்தப் பரம நகரத்துக்குச் செல்லும் பாதை மறைக்கப்பட்டே இருந்தது என்பது அநேகருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும். தேவதூதன் ஒருவன் அவரிடத்தில் அனுப்பப்பட்டு 'இப்பொழுதே நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பாயாக. அவன் தோல்

புதனிடுகிற சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான் நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான், என்று கூறுகிறான் (வ. 5, 6) கவனியுங்கள். அந்த தேவதூதன், கொர்நெலியு என்ன செய்ய வேண்டும் என்று போதிக்கவில்லை, ஒரு சுவிசேஷகனே ஜீவமார்க்கத்துக்குரிய வசனங்களைப் போதிக்கும் வேலையைச் செய்ய வேண்டியிருந்தது அப். 11:13, 14.

பிரியமானவர்களே! கொர்நெலியுவின் சன்மார்க்க வாழ்க்கை அவனை நித்திய பரம நகரத்துக்கு வழிநடத்த முடியவில்லை என்பதை அறிக. அவன் விசுவாசத்தை உற்பத்தி செய்கிற தேவனுடைய வசனங்களை ஒரு சுவிசேஷகன் மூலமாகக் கேட்கவேண்டியதாயிருந்தது ரோமர் 10:17. அது வெறும் விசுவாசம் அல்ல; சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியத் தூண்டும் விசுவாசம் தேவைப்பட்டது. அதனாலே தான் பேதுரு அவர்களுக்கு கர்த்தருடைய நாமத்தினால் ஞானஸ்நானம் (திருமுழுக்கு) கொடுக்கும்படி கட்டளையிட்டான் அப். 10:48.

**பலர் நேர்மையும் மனசாட்சியும் போதும் என்ற பாதையில் சென்று பரம நகரத்தை அடைய முடியும் என்று நம்புகின்றனர்.**

பலர் தங்களுடைய நேர்மையும், மனசாட்சியும் தங்களை அந்த பரம நகரத்துக்கு அழைத்துச் செல்லும் என்று நம்பி மோசம் போகின்றனர். அப்போஸ்தலனாகிய பின்னர் மாறின தர்சு பட்டணத்து சவுலின் பழைய வாழ்க்கையைக் கொஞ்சம் நினைவு கூறுங்கள். அவர் நேர்மைக்கும் சுத்த நல் மனசாட்சிக்கும் பேர் போனவர் தான், அவர் வாழ்க்கை நெறி குற்றம் சாட்டப்பட முடியாதது. ஆலோசனை சங்கத்தாருக்கு முன்னிலையில் இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல் மனசாட்சியோடு தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன் என்று தந்நிலை விளக்கம் கொடுக்கிறார் அப். 23:1. மேலும் வேறொரு இடத்தில் மாம்சத்தின் மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும் வைக்கலாம். வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாய் இருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம்.

நான் எட்டாம் நாளில் விருத்த சேதனம் அடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரேயரில் பிறந்த எபிரேயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்.

பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப் படுத்தினவன். நியாயப் பிரமாணத்துக்குரிய நீதியின்படி குற்றஞ் சாட்டப்படாதவன் என்கிறார். பிலி 3:4-6 அவர் நேர்மையும் நல் மனச் சாட்சியுமுள்ளவர் என்பதற்கு இன்னொரு ஆதாரம். பவுல் ஆக மாற்றப்பட்ட பிறகு தன்னுடைய பழைய வாழ்க்கையை நினைவுக் கூர்ந்து "நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷர்களையும் ஸ்திரீகளையும் கட்டி சிறைச் சாலைகளில் ஒப்புவித்து மரண பரியந்தம் துன்பப்படுத்தினேன் என்று தான் செய்த

தவறுக்கு ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்கிறார். அப் 22:4 மேலும் அகிரிப்பா ராஜாவின் முன்னிலையில் நியாய விசாரணைக்கு நிற்கும் போது முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்துக்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசேலமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரிகளிடத்தில் அதிகாரம் பெற்று பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச் சாலைகளில் அடைத்தேன். அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன் என்றவர் (அப் 26:9, 10) தான் ஒரு பாவி என்றும் தேவனுடைய சுத்தக் கிருபையினாலேயே இரட்சிப்படைந்தேன் என்கிறார். அவர் நேர்மையும் மனச்சாட்சியும் உள்ளவராய் நடந்து கொண்டபடியால் தன் தவறுகளை நியாயப்படுத்த முயற்சிக்க வில்லை. தான் பாவிகளில் பிரதானபாவி என்று குற்றத்தை ஒப்புக் கொள்கிறார். தீமோ 1-13-15 அந்த பரம நகரத்துக்குச் செல்லும் வழியை கர்த்தருடைய திட்டமான ஆலோசனையின்படி அனனியா மூலம் அறிந்து கீழ்ப்படிந்தே இரட்சிப்பைப் பெற்றார். அதாவது பரம நகரத்துக்குள் நுழையும் வழியைக் கண்டறிந்தார். அப் 22:16 நண்பரே! உங்கள் நிலை என்ன?

## இயேசு சொன்னார். நானே வழி

இயேசு தேவனுடைய பரம நகரத்தைப் பற்றிப் பேசும் போது நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்கிறார். யோவான் 14:6 மேலும் வேறு ஒரு இடத்தில் நானே வாசல் என் வழியாய் உட்பிரவேசத்தில் அவன் இரட்சிக்கப்படுவான். அவன் உள்ளும் புறமும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான் என்று சொல்லிவிட்டு யோவான் 10:9 ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல் வழியாய் பிரவேசியாமல் வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக் காரனுமாயிருக்கிறான் என்று வேஷதாரிகளின் முகமூடியை கிழிக்கிறார் 10:1

பவுல் இயேசுகிறிஸ்து சிலுவையில் ஏன் மரித்தார் என்பதற்கான காரணத்தை சொல்லும் போது இரு திறத்தாரையும் தமக்குள்ளே ஒரே மனுஷனாகச் சிருஷ்டித்து சமாதானம் பண்ணி பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்குள் ஒப்புரவாக்குவதற்காக என்கிறார் எபே. 2:15, 16. 18-ம் வசனத்தில் அந்தப்படியே நாம் இரு திறத்தாரும் ஒரே ஆவியினால் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய் பெற்றிருக்கிறோம் என்று முடிக்கிறார். ஆகவே அந்த பரம நகருக்குள் செல்ல விரும்புகிற அனைவரும் இயேசு கிறிஸ்து வழியாகவே வரவேண்டும்.

அவருக்குள் தேவனுடைய ஆசீர்வாதங்கள் வைக்கப்பட்டிருக்கிறதை நாம் வாசித்தறியும்போது அந்த உண்மை இன்னும் உறுதியாகிறது 2 கொ. 1:20 எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறதே. மேலும் தேவன் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் எபே. 1:3. இக்கருத்தை வலியுறுத்த 'கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு' எபே. 2-10; 'கிறிஸ்துவுக்குள் எல்லாரும்' உயிர்ப்பிக்கப்படுவார்கள் 1 கொரி. 15-22; அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) நீங்கள் பரிபூர்ணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள் கொலே. 2:10. என்று பல இடங்களில் 'கிறிஸ்துவுக்குள்ளே சகலமும்' என்ற கருத்து இழையோடியிருப்பதைக் கவனியுங்கள்.

இன்னும் என்ன சொல்வோம்? ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாய் இருக்கிறான்; பழையன ஒழிந்தன, எல்லாம் புதிதாயின. 2 கொரி. 5:17.' கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். பிலி. 4:4. கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள். வெளி. 4:13 இப்படி எல்லாமே கிறிஸ்துமயம். அப்படியானால் தேவனுடைய பரம நகருக்கு அழைத்துச் செல்லும் மார்க்கம் எது?

**சிலுவை வழியே பரம நகருக்கு அழைத்துச் செல்லும் நேர்பாதை**. பவுல் இதைக்குறித்து திட்டமும் தெளிவுமாகச் சொல்லுகிறது, என்னவெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டிருக்கிறீர்களே' கலா. 3:27. இவ் வசனத்தின்படி நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கும்போது அவருடைய சரீரமாகிய சபைக்குள்ளும் பிரவேசிக்கிறோம். 'எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு' 1 கொரி. 12:13 ஆகவே, ஒருவன் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவுக்குள் உட்படுத்தப்பட்டால் அவன் அவருடைய சரீரமாகிய சபைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறான் என்று பொருள் ஆகிறது. எபே. 1 22, 23. காரியங்கள் இவ்வளவாய் தெளிவுபடுத்தப்பட்டிருந்தாலும் பரம நகருக்குப் போகும் வழியைப் பற்றிக் குழப்பம் அடைந்துள்ள மக்கள் 'நாங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டோம், தண்ணீர் முழுக்கினால் அல்ல, என்று சொல்லி தங்கள் அறியாமையை வெளிப்படுத்துவர்.

ஆனால் சற்றே சிந்தித்துப் பாருங்கள். அவர் இரத்தம் எதற்காக எங்கே சிந்தப்பட்டது? பவுல் கூறுகிறார்: கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்து-

வுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ரோமர். 6:3,4, அவருடைய இரத்தம் அவருடைய மரணத்தின்போது சிந்தப்பட்டது என்று அனைவரும் அறிவர். ஒருவன் ஞானஸ்நானம் பெறும்பொழுது அவருடைய மரணத்துக்குள் ஞானஸ்நானம்' பெறுகிறான் என்று பார்த்தோம் அப்படியானால் தண்ணீர், அவருடைய மரணத்தின்போது சிந்தப்பட்ட இரத்தத்தின் சாயல். ஆகவே அது தண்ணீர் இரட்சிப்பல்ல. தேவனுடைய திட்டத்தின்படி அவருடைய இரத்தத்தினால் உண்டாகும் இரட்சிப்பே. இவைகளைப் பற்றி பவுல், முன்னே நீங்கள் பாவத்துக்கு அடிமையாயிருந்தும் இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமையானீர்கள்.' என்கிறார் ரோமர். 6:17, 18. அவர்கள் கீழ்ப்படிந்த உபதேசச் சட்டம் எது? இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல். அவர்கள் எப்பொழுது பாவத்திலிருந்து விடுதலையானார்கள்? 'அப்பொழுது'—அதாவது ஞானஸ்நானம் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சியின்போது, அவருடைய மரணத்தின் போது சிந்தப்பட்ட இரத்தம் அவர் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது பலன் தருகிறது.

நண்பனே, சகோதரியே! சிலுவை மார்க்கம் பரம நகருக்கு அழைத்துச் செல்லும்' என்று ஒரு பாட்டு உண்டு அந்தப்பாட்டு மிக ஆழமான கருத்துள்ளது. ஆம்! சிலுவை மார்க்கம் பரம நகருக்கு வழி காட்டுகிறது' யார் அந்த பரம நகரத்துக்குள் பிரவேசிக்கக்கூடும் என்று நீங்கள் கேட்பீராகில், கர்த்தர் கூறியதையே தான் உங்களுக்குத் திருப்பிச் சொல்லவேண்டியதாக இருக்கும். 'ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும் வாசல் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் வெளி. 22:14.

இதுவே நான் உங்களுக்குக் கூறும் நிறைவு ஆலோசனை. இப்பொழுது உங்களுக்கு தேவனுடைய பரம நகரத்துக்குச் செல்லும் மார்க்கம் தெளிவாய்த் தெரிகிறதா? பின் ஏன் தாமதம்?

தில்லார்டு தர்மன்

## கிறிஸ்தவனும் உப்பும்

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும் மனுஷரால் மிதிக்கப் படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

நீங்கள் எப்படிப்பட்டவர்கள், சாரமுள்ளவர்களா?

# உங்களுக்கு மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்

மனிதர்கள் உண்மையாகத் தங்கள் இருதயத்தை ஆராய்ந்து பார்ப்பார்களானால் தாங்கள் எவ்வளவோ காரியங்களில் குறைவுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை உணர முடியும். நாம் செய்ய வேண்டியகாரியங்கள் அநேகவற்றை நாம் செய்வதில்லை, அநேக காரியங்களைச் செய்யவே கூடாது. ஆனால் செய்துகொண்டிருக்கிறோம். இப்பொழுது நாம் செய்து கொண்டிருக்கிற காரியங்களை முயற்சித்தால் இன்னும் சிறப்பாகச் செய்ய முடியும் என்கிற உண்மைகள் எல்லாம் தெரியும்.

நமது குழந்தைப் பருவத்தில் இருந்தே பலமுறை 'இனிமேல் நான் புதிய வாழ்க்கை ஆரம்பிக்கிறேன், நான் பிழைத்துக் காட்டு-கிறேன், நான் செய்து காண்பிக்கிறேன்' என்பன போன்ற தீர்மானங்களைச் செய்கிறோம். ஆனால் கொஞ்ச காலம் தான். தொடர்ந்து செயல்படுத்துவது கிடையாது. இந்த வகையில் சுவிசேஷம் நமது பல-வீனத்தை ஒருவாறு சமாளிக்க உதவி செய்கிறது என்று கூறலாம். எப்படியெனில் சுவிசேஷத்தின் தலையாய நோக்கமே நம்மைப் புதிய சிருஷ்யாக மாற்றுவது தானே. 'ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான்.' என்கிறது 2 கொரி. 5:17. 'புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு' (ரோமர் 6:4.) 'ஒருவன் ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறக்கவேண்டும்' (யோ. 3:5.) என்றெல்லாம் சொல்லப்படுவது ஒரு புது வாழ்க்கையின் தொடக்கத்-தையே சுட்டுகிறது. அந்தப் புது வாழ்வை இனி நமக்காக அல்ல; கிறிஸ்துவுக்காக வாழவேண்டும் 2 கொரி. 5:15.

அந்தப் புது வாழ்வு அதாவது கிறிஸ்தவ வாழ்க்கை உலகத்தை விட்டு வெளியே வரும்படி அழைத்து, கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்து நீதியின் மார்க்கத்தில் நடக்கத் தூண்டுகிறது. 'ஒருவன் என்னைப் பின் பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்' என்கிறார் இயேசு. மத். 16:24. சொன்னதோடு நில்லாமல் கெத்சமேனே தோட்டத்தில் சிலுவைக்குச் செல்வதற்கு சற்று முந்தி, பிதாவை நோக்கி ஜெபிக்கும் பொழுது 'பிதாவே, என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்-தின் படியே ஆகக் கடவது' (லூக். 22:42.) என்று ஜெபித்து நமக்கு முன்மாதிரியை விட்டுச் சென்றார். அவர் தேவனுடைய சித்தத்துக்கு இசைவாக வாழ்ந்ததினால் ஜெபத்திலும் அதையே குறிப்பிட்டார். அதே வழியைத்தான் நாமும் பின்பற்ற வேண்டும். அப்போஸ்தலர்கள் 'நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய் அசுத்த-மானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்' என்று சொன்னார்கள் 2 கொரி. 6:17.

ஆனால் அந்தப் புதிய வாழ்வை மேற்கொள்ளுவதற்குரிய பெலத்தைத் தருவது என்? பாவத்துக்கு விலகி கிறிஸ்துவுக்குள் தூய வாழ்வு வாழ நமக்கு ஆலோசனை தருவது எது? சிலபேர் 'பரிசுத்த ஆவி நேரடியாக வந்து நம் உள்ளத்தில் கிரியை செய்து நாம் பரிசுத்தமான வாழ்க்கை வாழத் தூண்டுகிறது இல்லாவிட்டால் நாம் பாவத்தை விட்டு மீளுவது முடியாத காரியம்' என்று சொல்லுகிறார்கள். வேறு சிலர் நம் கர்த்தரை நோக்கி ஜெபித்தால் போதும். அவர் நமக்குத் தேவையான பெலத்தைக் கொடுத்து, சோதனையிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வார் என்று போதிக்கின்றனர். ஆனால் அந்த மாதிரியான போதகங்கள் வேதாகம அங்கீகாரம் பெறாதவைகள். நாம் இரட்சிக்கப்படுவதும் அல்லது பாவத்திலிருந்து நாம் மீளாமற் போவதும் முற்றிலும் தேவ சித்தம். அதில் நம்முடைய முயற்சியோ பங்கோ ஒன்றும் கிடையாது என்று கூறுவது நம்முடைய பொறுப்பைத் தட்டிக் கழிப்பதோடு கர்த்தரே நம்முடைய வீழ்ச்சிக்குக் காரணம் என்று குற்றம் சாட்டுவது போலவும் இருக்கிறது. அப்படியானால் ரோமர். 14:12-ல் 'நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிப்பான்' என்று சொல்லப்பட்டிருக்கிறதே அதற்கு என்ன பொருள்? வெளி. 20:12-ல் 'மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத் தீர்ப்படைந்தார்கள்' என்பதின் அர்த்தம் என்ன?

மேற்படி வசனங்களின் கருத்தை சிந்திக்கும்போது நாமும் புதிய வாழ்க்கைக்குள் பிரவேசிப்பதற்கு சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்று தெளிவாகிறது. அதை மனதில் கொண்டுதான் பவுல் அப்போஸ்தலன் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் 'உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்துக்கொத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்' என்கிறார் ரோமர். 12:1,2.

தேவனுடைய வசனத்தைப் படிப்பதிலே உங்கள் மனதை மறுரூபப்படுத்த வேண்டும். இந்தக் கருத்தை சிலர் ஏற்கமாட்டார்கள் அதனால் அதன் உண்மை மாறுவதில்லை. ஓசியா தீர்க்கதரிசி 'என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள். நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளை -

க்களை மறந்து விடுவேன்' என்கிறார் ஓசியா 4:6. பல வேளைகளில் தேவனுடைய வசனத்தை அறியாதினாலேயே அநேக தவறான காரியங்கள் நடைபெற்று விடுகின்றன. இயேசு வாழ்ந்த நாட்களில் சதுசேயரைப் பார்த்து 'நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங் கொள்கிறீர்கள்' என்கிறார் (மத். 22:29). யூதர்கள் இயேசுவை கொலை செய்ய ஒப்புக்கொடுத்ததற்கும் அதிகாரிகள் அதற்கு உடன்பட்டதுக்கும் தேவனுடைய வசனங்களைத் தெளிவாக ஆராய்ந்து இயேசு யார்? என்பதை அறியாததே காரணம் அப். 3:17. ஞானஸ்நானம் தேவனுடைய கட்டளை என்பதை அறியாமல் அதை அசட்டை செய்து விட்டு அதற்குப் பதிலாக மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட சில மாற்றுச் சடங்குகளை செய்தால் போதும் என்று பரிசேயரும், நியாய சாஸ்திரிகளும் நடந்து கொண்டதற்கு அறியாமையே காரணம் லூக். 7:40. அப்போஸ்தலனாகிய பவுல் சவுல் ஆக இருந்த நாட்களில் இயேசுவுக்கு விரோதமாய் செயல்பட்டதற்கும் பரிசுத்தவான்களை இம்சித்துக் கொலை செய்யும் துணிந்ததற்கு அறியாமையே காரணம் அப். 26:9, 10. 1 தீமோ. 1:15. ஆகவே பெரோயா பட்டணத்தாரைப் போன்று காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினமும் வேதத்தை ஆராய்ந்து பார்க்கவும் (அப். 17:11) 'எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளவும் (1 தெச. 5:21.) முயலுவோமாக.

கிறிஸ்துவினால் கிடைக்கும் புது வாழ்வைப் பெறுவதற்கு ஒரே வழி: அவர் சொல்லுகிறதுபோல் ''எல்லாரும் தேவனாலே போதிக்கப் பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதி இருக்கிறதே. ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்'' என்பதுதான். யோவான் 6:45. வெறுமனே உணர்ச்சி வசப்படுவது அறிவு பூர்வமாக சிந்தித்து முடிவு செய்வதற்கு மாற்று ஆகாது. தேவன் நமக்காக எல்லாவற்றையும் செய்து விடுவார் என்று எதிர்பார்க்கவும் கூடாது. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் நம் பங்கை நாம் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படிக் கற்றுக் கொள்வதின் மூலமாகவே தம்முடைய மகிமையினாலும் காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டியயாவற்றையும் தருகிறார். 2 பேதுரு 1:3 ஆகையால் நாம் தேவனுடைய வசனங்களைக் கற்றுக்கொள்வது மிகவும் அவசியம். அதற்கு மாற்று வழியோ குறுக்கு வழியோ கிடையாது. மறுரூபம் அடைவதற்கு மனம் புதிதாக வேண்டும் மனம் புதிதாக வேண்டுமென்றால் தேவனுடைய வசனங்களைக் கருத்தாய் படிக்க வேண்டும். (2 தீமோ 2:15)

## நம்முடைய வாழ்க்கையில் தேவ வசனத்தின் வல்லமை

நாம் இரட்சிக்கப் பட்டிருப்போமானால் அது விசுவாசத்தினாலேயே எபே. 2:8; ரோமர் 5:1 அந்த விசுவாசம் தேவனுடைய வசனத்தைக்

கற்பதனாலேயே வருகிறது. ரோமர் 10:17 அப்போஸ்தலன் பவுல் கர்த்தருக்குப் பிரியமான சகோதரர்களே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப் படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும் படிக்கு ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார் 2 தெச 2:13,14 நாம் விசுவாசிக்கிறோம் என்றால் நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டு ஏற்றுக் கொண்டதினாலேயே விசுவாசிக்கிறோம். அதைத் தவிர வேறு வழியில்லை. விசுவாசத்தை உற்பத்தி செய்வது தேவனுடைய வார்த்தையே. ரோமருக்கு பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனனே அவனுக்கு இரட்சிப்பு உண்டாக அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கென்று அந்த சுவிசேஷத்தினாலே வெளிப்படுத்தப் படுகிறது. ரோமர் 1:16, 17.

தேவனுடைய வசனம் விசுவாசம் உண்டாவதற்குக் காரணமாக இருக்கிறபடியால் அது இரட்சிப்பையும் கொடுக்கிறது ரோமர் 1:16 பேதுரு கொர்நெலியுவின் வீட்டாருக்கு சுவிசேஷத்தை அறிவித்த பிறகு தன்னுடன் வந்த யூத விசுவாசிகளிடம் தனக்கு ஆள் அனுப்பும்படி கொர்நெலியுவுக்கு ஒரு தேவதூதன் சொன்னார் என்கிறார். நீயும் உன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான். அப் 11:14 இவ்வளவு தெளிவாக காரியங்கள் சொல்லப்பட்டிருந்தும் அநேகருக்கு இரட்சிப்பு அடைய தேவனுடைய வசனம் இன்றியமையாதது என்று விளங்கிக் கொள்ள முடியாமல் இரட்சிப்படைவதற்கு எதை எதையோ செய்து நாட்களை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். யார் எதைச் சொன்னாலும் செய்தாலும் சுவிசேஷமே இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலனாயிருக்கிறது என்பது ஒன்றே மெய். தேவ வசனம் இல்லாமல் ஒருவரும் இரட்சிப்பு அடைய முடியாது. தேவனுடைய வசனம் இல்லாமலே இரட்சிப்பு அடைந்துவிட்டேன் என்பதும் விதை போடாமலே செடி முளைத்து விட்டது என்று கூறுவதும் ஒன்றுதான். இதைக் குறித்து யாக்கோபு கூறும்போது 'அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார் ஆகையால் எல்லாவித அழுக்கையும், கொடிய துர்குணத்தையும் ஒழித்து விட்டு உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் என்கிறார் யாக் 1:18,21. அதே கருத்தைப் பேதுருவும் ஆமோதித்து' அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசன

மாகிய அழிவில்லாத வித்தினுலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்-கிறீர்களே...கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்-கும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே 1 பேதுரு. 1:23, 25.

ஆகவே நாம் மறுரூபமாக்கப்பட வேண்டும் என்ருல் அல்லது ஆவியிலே மனம் புதிதாக வேண்டும் என்ருல் அது மனம் புதிதாகிறதி-ஞலே உண்டாகும் மறுரூபமே ரோமர். 12:2. நம்முடைய மனம் புதிதாக்கப்பட வேண்டும் என்ருல் நாம் தேவனுடைய வசனத்தைக் கற்று அதன்படி நடக்கவேண்டும் யாக். 1:22-25.

## கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக் கொள்ளுங்கள்

இயேசு 'ஒருவன் ஜலத்தினுலும் ஆவியினுலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க முடியாது' என்ருர் யோவான் 3:5, அப்போஸ்தலனுகிய பவுலும் பின்னர் இதைப்பற்றிச் சொல்லும்போது 'புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும் படிக்கு (ரோமர், 6:4.) மறுபடியும் பிறந்து கிறிஸ்துவுக்குள் புது வாழ்வு தொடங்குகிறேம் (2 கொரி. 5:17.) என்கிருர். இப்படியாக நாம் ஞானஸ்நானத்தினுல் அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேல் உள்ள விசுவாசத்தினுலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் என்று கூறிவிட்டு (கொலே. 2:12.) நீங்கள் கிறிஸ்து-வுடனே கூட எழுந்ததுண்டானுல் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள் ...ஏனென்ருல் நீங்கள் மரித்தீர்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே கூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது என்கிருர் கொலே. 3:1, 3.

மனம் புதிதாகும் இந்த் தொடர் நிகழ்ச்சியினுல் பல நன்மைகள் ஏற்படுகின்றன தேவன் நம்மை சோதனையிலிருந்து விடுதலையாக்கு-கிருர் 1 கொரி. 10:12, 13. நான் உனக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன் என்று சங்கீதக்காரன் சொல்லுவது ஏவ்வளவு உண்மை! பார்க்கவும், கேட்கவும் முடியாத விநோதமான இனம் தெரியாத உணர்வுகளுக்கு அடிமையாவதை விடுத்து தேவனுடைய வசனம் சொல்லுகிற சரியான வழியை அறியவும் அந்த வழியில் நடக்கும் துணிவும் உள்ளவர்களாக மாறுவோம். தேவனுடைய வார்த்தைகளினுல் தான் பக்தி விருத்தி யடைய முடியும் அப். 20:32. ஆகையால் நீங்கள் கர்த்தராகிய இயே-சுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும் அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்து கொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்-திரத்தோடே அதில் பெருகுவீர்களாக! என்கிருர் பவுல் கொலே. 2:6, 7.

கிறிஸ்தவர்கள் என்று தங்களை கூறிக்கொள்ளுகிற சிலர் ஒரு விதமான ஆவியின் அரிப்பு தங்கள் உள்ளங்களிலே ஏற்பட்டுக் கிரியை செய்து அவர்களை அலைக்கழிப்பதால் ஒரு ஆவேசம் பிறக்கும், என்று எண்ணிக்கொண்டு தங்களை அலட்டிக் கொள்கிறார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தைகள் விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே பெலன் செய்கிறது என்று கூறுகிறது. 1 தெச. 2:13. அப்படிப்பட்ட வார்த்தைகளை நாம் கற்று விசுவாசிப்பதினால் தானே நம்முடைய கர்த்தர் எப்படி வாழ்ந்தார் என்று அறிந்து அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்ற முடியும் (1 பேது 2:21.) அப்போஸ்தலன் பவுல், கிறிஸ்துவின் மேலும் அவருடைய வசனத்தின் மேலும் வைத்திருந்த நன்மதிப்பின் காரணமாகத்தானே கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன் என்று கூறுகிறார். கலா 2:20 அவருக்குள் ஏற்பட்ட அந்த மாற்றம் கிறிஸ்துவின் வல்லமையான மாற்றங்களினாலேயன்றி வேறொன்றினாலும் ஏற்படவில்லை.

தேவன் பவுலுடைய நிருபங்களின் மூலம் நாம் மறுரூபம் ஆக்கப்படவேண்டும் என்று கூறுகிறார் ரோமர். 12:2. பவுல் இங்கு குறிப்பிடுகிற மறுரூபம் என்ற வார்த்தை மெடாமோர் (Metamorphou-sthe) என்ற கிரேக்கச் சொல்லின் மொழியாக்கம். அதை ஆங்கிலத்தில் கொஞ்சம் மாற்றி (Metamorphesis) 'மெடாமோர்பிஸ்ஸ்' என்று சொல்லுகிறார்கள் உயிரியல் (Biology) படித்தவர்களுக்கு இந்த வார்த்தையின் பொருள் நன்றாக விளங்கும். அதாவது இந்தச் சொல் ஒரு பட்டுப்பூச்சி முட்டை பல்வேறு மாற்றங்களை அடைந்து ஒரு முழுமையடைந்த பட்டுப் பூச்சியாக வளர்ச்சியடைவதைக் குறிக்கும் ஒரு கிறிஸ்தவனின் வளர்ச்சியும் கூட அப்படிப்பட்ட வளர்ச்சியை எய்தி கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக வளரவேண்டும் என்ற கருத்தில் தான் பவுல் அந்த வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார்.

இது எப்படி சாத்தியமாகும் என்பதை விவரிப்பதற்காக பவுல் 'நாமெல்லோரும் திறந்தமுகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்' என்கிறார் (2 கொரி. 3:18.) அதே கருத்தை 'தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கொலோசெயர் நிருபத்தில் வாசிக்கிறோம் கொலே 3:10,

ஆகவே நாம் மறுரூபம் அடையவேண்டுமென்றால் மனம் புதிதாக வேண்டும் அதற்கு நாம் தேவனுடைய வசனத்தைக் கருத்தாய்ப் படித்து அதன்படி நடக்கவேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் புது வாழ்வு அடைந்து அவருடைய சாயலைத் தரித்துக்கொள்ள அதைவிட வேறு வழியோ அல்லது குறுக்கு வழியோ கிடையவே கிடையாது.

கிலம் தர்மன்

# சோதனைகளை எதிர்த்துப் போராடுதல்

''தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருங்கள். விழித்திருங்கள் ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்.

விசுவாசத்திலே உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்தில் அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே'' 1 பேதுரு 5:8,9

'ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'' யாக் 4:7

மேற்சொன்ன வசனங்களின்படி சாத்தானுடைய ஆட்சி இன்னும் இறந்து போகவில்லை. நன்றாக ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் மனித குலத்தின் மேல் அவனுடைய ஆட்சியின் சின்னம் நாளுக்கு நாள் பிரகாசமாகவும் அதிக மக்கள் மீது ஜொலிப்பதையும் பார்க்கலாம்.

மனுக்குலத்தை எப்படி சாத்தான் சோதனைக்குள்ளாக்குகிறான்? அதுவா? நம்முடைய சிந்தனையைச் சிதறடிக்கிறான். நம்முடைய வாயில் தகாத வார்த்தைகளைப் போடுகிறான். நம்முடைய நடவடிக்கைகளில் மாமிச சிந்தனையை அதிகம் புகுத்துகிறான். நம்முடைய நடத்தையைக் கோணலாக்குகிறான். மேலும் கர்த்தருடைய பிள்ளைகளின் உறுதியைக் குலைத்து சத்தியத்தோடு சமரசம் செய்யும்படியான சிந்தனைகளைத் தருவான். தங்களுடைய ஆவிக்குரிய கடமைகளில் அசட்டையாயிருக்கும்படி செய்வான். தீய நட்பை நாடும்படி ஆலோசனை கூறுவான். தேவன்—உலகம் ஆகிய இரண்டு எஜமான்களுக்கு ஒரே சமயத்தில் ஊழியஞ் செய்யும்படி தூண்டுவான்.

கர்த்தருடைய பிள்ளைகள் தேவனிடத்திலிருந்து இழுத்துக் கொள்வதற்கு அவனுடைய புகழ்பெற்ற போராயுதங்களாகிய கண்களின் இச்சை மாமிசத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை என்னும் அஸ்திரங்களை லாவகமாக பயன்படுத்துவான். (1 யோவான் 2:15-17)

சாத்தானோடு எவ்விதமாய் எதிர்த்துப் போராடுவது என்பதற்கு எவ்விதமான சட்டதிட்டங்களும் கிடையாது. அவனுடைய உறவே வேண்டாம் என்ற தீர்மானத்தோடு அவனை அருகிலேயே அண்ட

விடாமல் பார்த்துக் கொள்வது தான் ஒரே வழி. கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களைப் படித்து அறிந்தவர்கள் சாத்தான் தங்கள் மீது ஆதிக்கம் செலுத்த ஒருநாளும் அனுமதிக்க மாட்டார்கள்.

**சாத்தானின் சோதனைகளை எவ்வாறு தடுத்து நிறுத்தலாம் என்பதற்கு சில ஆலோசனைகள் தருகிறோம்; பயன்படுத்துங்கள்.**

1. உங்களை மடக்குவதற்கு அவன் கையாளும் தந்திரங்களாகிய கிண்டி விடும், ஆசை காட்டும், வற்புறுத்தும் யோசனைகளுக்கு இணங்கவே இணங்காதீர்கள். 'பார்த்து விடலாமே' என்ற அசட்டு தைரியம் வேண்டவே வேண்டாம். அவன் அநேகமாயிரம் ஆடுகளை அடித்த புலி என்பதை மறவாதீர்.

2. அவனுடைய சோதனைகள் என்ன செய்துவிடும் என்று எண்ணி உங்கள் பலத்தைக் குறித்து பெருமை கொள்ளாதீர்கள். அப்போஸ்தலன் பேதுரு இப்படி எண்ணித்தான் வசமாய் மாட்டிக்கொண்டான். மூன்று தரம் ஆண்டவரை மறுதலித்து பிசாசிடம் தோல்வியுற்றான். மத் 26:31-33; லூக் 22:31.34.

3. சொல்லப்பட்ட ஆலோசனைகளை மீறி, தப்பித் தவறி மாட்டிக் கொண்டீர் என்று வைத்துக் கொள்ளுங்கள். பரிசுத்த வேதாகமத்தில் அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து விடுபடுவதற்கான வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைத் தக்க சமயத்தில் பயன்படுத்தி விடுதலை பெறலாம். 1 கொரி 10:13; சங். 119:11; லூக். 2:10,1; I யோவான். 3-9. சிலர் போதிக்கிற மாதிரி தேவன் யாருக்கும் சோதனைகளை ஜெயிப்பதற்கு அற்புதமான முறையில் வழிவகுத்துக் கொடுப்பதில்லை என்பதை அறிக.

4. ஆகாத சம்பாஷணைகளைத் தவிர்க்க வேண்டும் 1 கொரி 15:33. ஆகாத சம்பாஷணை என்பதை தீய நட்பு என்று திருத்திய மொழிபெயர்ப்புக் கூறுகிறது.

5. கர்த்தருடைய சபை கூடி வருதலை ஒருபோதும் புறக்கணிக்க வேண்டாம் அப். 20 7; எபி. 10;24, 25; வெளி. 1:10. பரிசுத்தவான்களோடு சேர்ந்து ஆராதிப்பதை அசட்டை செய்தால் ஆன்மீக பலம் குன்றி கர்த்தருடைய காரியங்களில் உள்ள பிடிப்பு குறைந்து போகும்.

6. தேவனோடு கொண்டிருக்கிற உறவின் நெருக்கத்தை நெகிழ விடாதே. ஒரு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டால் விளக்குகள் அணைந்து விடுகின்றன. அதனாலன்றோ 'இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள்' என்கிறார் பவுல். 1 தெச. 5:17.

7. பரிசுத்த வேதாகமத்தை நாள்தோறும் வாசி. நீங்கள் கர்த்தருடைய வசனத்தை அனுதினமும் வாசித்துத் தியானிக்க மறப்பீர்களானால் உங்கள் ஆன்மா பட்டினி கிடக்க நேரிடும். உங்கள் ஆன்மாவுக்கு ஆகாரம் அதுதானே. மத். 4:4; 1 பேது. 2:2. 2 தீமோ. 2:15; 2 பேதுரு. 3:18.

8. உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் எண் 32:23. நம்முடைய பாவம் நம்மை எப்படிக் காட்டிக் கொடுக்கும்? நம்முடைய பாவங்கள் ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு பரம இரகசியமானவைகள். நமக்கும் கடவுளுக்கும் மட்டுமே தெரியும் என்று சொல்லாதே. உன்னுடைய பாதிக்கப்பட்ட மனசாட்சி, தூக்கமில்லாத இரவுகள். நாளுக்கு நாள் மெலிந்துகொண்டே போகும் உனது 'சரீரம், துக்கத்தின் பெருமூச்சு, பீறி வரும் கண்ணீர் இப்படிப்பட்ட காரியங்கள் உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும் ஒரு பாவம் வெளிப்படையாகத் தெரியாமல் சாமர்த்தியமாக மறைக்கப்படலாம் ஆனால் முடிவு மாறாதது' பாவத்தின் சம்பளம் மரணம். ரோமர். 6:23; 1 தீமோ. 5:24.

9. நீ எங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பதை தேவன் பார்த்துக் கொண்டே இருக்கிறார் என்பதை எப்பொழுதும் மனதில் வை. யோபு 26:6, நீதி 15:11, சங் 139:1-2; 4:13. அவருக்கு நாம் ஒவ்வொருவரும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் 1 கொரி 5:10.

10. உன் மனதை அடக்கி ஆளப் பழகு. 2 கொரி 10:4-5 அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான் நீதி. 23:7. தீமை பயக்கும் தரக்குறைவானவைகளைப் பேசாமல் இருக்க வேண்டும். பிலி. 4:8. தன்னுடைய எண்ணங்கள் மாமிச இச்சை, துர்குணம் ஆகிய தூசுகள் அண்டாமல் தூய்மையாக வைத்துக்கொள்ளப் பழக வேண்டும். மனதைத் தூய்மைப் படுத்து. 'மாமிசத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாக்குதலை தேவ பயத்தோடே பூரணபடுத்தக் கடவோம் 2 கொரி. 7:1; ரோமர். 2:1-2; 13:10-14; கொலே. 3:5-15.

11. பாவம் என்பது எல்லா காலத்திலும் தீமை பயப்பதே என்பதை மறவாதே. பாவத்தில் சிறிய பாவம் பெரிய பாவம் என்று கிடையாது வேதாகமத்தின்படி பாவம் என்றால் நியாயப்பிரமாண மீறுதல் என்றே குறிப்பிடுகிறது 1 யோவான் 3:4.

12. உன்னை சோதனைக் கண்ணியில் அகப்படுத்தும் கீழ்த்தரமான

சபலங்களுக்கு ஆளாக்கும் சூழ்நிலைகளிலிருந்து உன்னை விலக்கிக் காத்துக்கொள். தாவீது அரசனும் பெத்சேபாளும் சந்திக்க நேர்ந்த சூழ்நிலை தானே தாவீதின் மனதைக் கட்டுபடுத்த முடியாமல் பாவத்தில் விழ வைத்தது II சாமு 11: 2-27; 12:1-23. "எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையி-னின்று இரட்சித்துக் கொள்ளும்" என்று கற்பித்தாரே இயேசு மத் 6:13. கர்த்தர் சோதிக்கிறார். ஆனால் தீமையினால் அல்ல தீமையினால் சோதிக்கிறவன் பிசாசே. யாக் 1:13-15. இப்படி இருக்க உன்னால் தடுக்க முடியாத சோதனைக்கு உன்னை ஏன் ஆட்படுத்திக் கொள்ள வேண்டும்?

W. A. ஹால்லி

(26 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

கொண்டு ஏங்கவும் வேண்டாம். அதை மறைக்கவும் வேண்டாம். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற திறமைகள் என்ன என்புதைக் கண்டு-பிடித்து அவற்றை வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் சிறந்த வாழ்க்கை வாழ்வது எப்படி என்று சிந்திப்போம். நமக்குள்ள வசதி வாய்ப்புகளை அறிந்து செயல்படுவோம். நம்மை நாமே சரியாக மதிப்பீடு செய்துகொண்டு சீரான வாழ்க்கை வாழ்ந்தால் மற்றவர்களும் நம்மை மதிப்பர் மனச்சாட்சி நம்மைக் குற்றப்படுத்தாதபடி நேர்மையாக வாழ்வோம். மனச்சாட்சிக்கு விரோதமாய் வாழ்ந்தால் மகிழ்ச்சியை இழப்போம். ஆரோக்கியம் பாதிக்கப்படும். ஏன், நம் தூக்கத்தையே கூட இழந்து விடுவோம், ஒரு நாளைக்கு மட்டும் வாழ். அப்பொழுது தான் மகிழ்சியாக இருக்க முடியும். நேற்றைக்காக வாழ முடியாது. ஏனெனில் அது கடந்து விட்டது. நாளைக்காக நாம் வாழமுடியாது. ஏனெனில் அது இன்னும் வரவில்லை.

ராய்பிஸ்லி

## கிறிஸ்தவனும் விளக்கும்

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது.

# வாழத் தகுந்த வாழ்க்கை.

வாழ்க்கை வாழத் தகுந்ததா? என்ற கேள்விக்கு சிலருடைய பதில் வாழத் தகுந்தது இல்லை என்பதே. போல் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் நம்மைப் படைத்த தேவன் வாழ்க்கை வாழத் தகுந்தது என்று கூறுகிறார்.

ஆனால் ஒன்று. வாழ்க்கை வாழத் தகுந்த மாதிரித் தானாகவே அமைந்து விடாது. நாம் தான் அதை மாற்றி அமைக்க வேண்டும். வெறுமனே நாட்களைப் போக்கிக் கொண்டு வாழ்வது சிறப்பல்ல; பயனுள்ள வகையில் வாழ்ந்து காட்ட வேண்டும். சிறப்புற வாழ்வது என்பது ஒரு கலை. அதில் தேர்ந்து விட்டால் அவன் ஒரு கலைஞனைவிட, சிற்பியை விட மேலானவன்.

வெற்றி வாழ்க்கைக்கும், வெறுமனே பூமிக்கு பாரமாயிருப்பதற்கும் நிரம்ப வித்தியாசமுண்டு. வாழ்க்கை சிறக்க வேண்டும் என்றால் விடாமுயற்சி தேவை. மகிழ்ச்சிகரமான வெற்றி வாழ்க்கை வாழ்வது எப்படி என்னும் இரகசியத்தை தேவனுடைய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சிகரமான வெற்றி வாழ்க்கை வாழ விரும்புகிற அனைவரும் தினமும் சிறிது நேரத்தை அதற்கென ஒதுக்கிக் கருத்தாய்க் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது நல்ல பலன் கிடைக்கும்.

மகிழ்ச்சிக்கு ஊற்றே உழைப்புத்தான். வேலையொன்றும் செய்யாமல் உண்டு உறங்கி நாட்களைத் வீணாக்கிக் கொண்டிருப்பவர்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. ஒருசோம்பேறியின் மூளை பிசாசின் பணித்தளம் என்பது பழமொழி. சோம்பேறித்தனம் அதிருப்தியையும் கசப்புணர்வையும் உற்பத்தி செய்கிறது. மனம் விபரீதமான கற்பனைகள் செய்ய அனுமதிக்கிறது. வேண்டாத பிரச்சனைகளை எல்லாம் தூக்கிப் போட்டுக் கொண்டு காரணமில்லாமல் அச்ச உணர்வையும் பீதியையும் வளர்க்கிறது.

மனிதன் உழைக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமும் திட்டமும் ஆகும். அதனாலன்றோ ஆதாமையும் ஏவாளையும் படைத்து ஏதேன் தோட்டத்தில் குடியேறப் பண்ணி தோட்டத்தை பண்படுத்தவும் காக்கவும் கட்டளையிட்டார். அதன் மூலம் மனிதன் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு உழைப்பது அவசியம் என்பதை நமக்கு விளங்கப் பண்ணுகிறார்.

அடுத்து மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அன்பு அடிப்படை. வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை, ஏமாற்றங்களை, சிரமங்களை மாற்றி வாழ்க்கைக்கு சுவையூட்டுகிறது அன்பு. அன்பு இல்லாத வாழ்க்கை

வறண்ட பாலைவனத்துக்குச் சமானம். அன்பின் மாட்சியைப் பற்றி பவுல் கொரிந்து திருச்சபைக்கு எழுதின முதலாம் நிருபத்தின் 13 ஆம் அதிகாரத்தில் விளக்கியிருக்கிறார். அன்பு மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் தருகிறது. நாம் ஒவ்வொருவரும் மற்றவர்கள் நம்மீது அன்பாக இருக்க வேண்டும். என்று எதிர் பார்க்கிறோம். ஆனால் நாம் மற்றவர்களை அவ்வாறு நேசிக்கிறோமா? நாம் மற்றவர்களிடத்திலிருந்து அன்பை எதிர்பார்த்தால் நாம் முதலில் அவர்களிடத்தில் அன்புபாராட்டப் பழக வேண்டும். அன்பு தான் அன்பைப் பிறப்பிக்கும். அன்பை நாம் வெளிப்படுத்தும் போது மகிழ்ச்சி பிறக்கிறது.

சிறந்த வாழ்க்கை தொண்டுள்ளம் கொண்டது. துன்பத்தில் துவழும் மக்கள்மீது அக்கரை செலுத்த வேண்டும். அவர்களை ஆதரிக்க வேண்டும். உலகத்தில் எங்கும் சுயநலமே நிரம்பி வழிகிறது. ஒரு சிறு பையனிடம் நல்ல சமாரியன் கதையால் நீ கற்றுக்கொண்ட பாடம் என்ன?என்று கேட்டபொழுது'நான் சிரமப்படும் பொழுது மற்றவர்கள் ஓடிவந்து எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று 'பளிச்' என்று பதில் சொன்னான். கதையின் கருத்தை அந்தச் சிறுவன் எப்படித் தவறாகப் புரிந்து கொண்டானோ அவ்வாறே நாமும் பல சந்தர்ப்பங்களில் சுயநலமுடையவர்களாக நடந்துகொள்கிறோம். உன்னைப்போல பிறனையும் நேசி என்பதே இயேசு பெருமானின் உபதேசம் (மத். 22:39.) ஆகையால் நாம் மற்றவர்களுடைய கஷ்டங்களில் நாம் விருப்பத்தோடு உதவவேண்டும். மற்றவர்களுடைய நலனில் அக்கரை காட்ட வேண்டும்.[1]அவர்களுடைய தேவையை அறிந்து உதவிசெய்ய வேண்டும். அவன் கிறிஸ்துவை அறியாதிருந்தால் அவனுக்குக் கிறிஸ்துவின் அன்பைக் கூறி அவருக்குள் கொண்டுவரவேண்டும்.

வாழத் தகுந்த வாழ்க்கைக்கு இருக்கவேண்டிய இன்னும் ஒரு அம்சம் என்னவென்றால் நம்மை நாமே சரியாக மதிப்பீடு செய்து கொள்ள அறியவேண்டும். போதுமென்ற மனதுடனே கூடிய தெய்வ பக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவருக்கும் தேவன் சில திறமைகளை, ஆற்றலைக் கொடுத்திருக்கிறார். கடவுள் நமக்கு கொடுக்காத திறமைகளைக் குறித்து ஏங்கி முணுமுணுக்கக் கூடாது. நமக்குக் கொடுக்கப்பட்ட திறமை, ஆற்றலின் அளவுக்குத் தக்கதாக அதை நாம் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். ஒரு தாலந்து பெற்ற மனிதன் நிராகரிக்கப்பட்டதற்கு அவனிடத்தில் குறைவான தாலந்து இருந்தது என்பது காரணம் அல்ல; இருக்கிற அந்த ஒரு தாலந்தையும் பயன்படுத்தாமல் புதைத்து வைத்தானே அதுதான் நிராகரிப்புக்குக் காரணம். ஆகவே தேவன் நம்மிடம் ஒப்படைத்துள்ள திறமைகளை நன்முறையில் பயன்படுத்துவோம். நமக்குச் சில குறைபாடுகள் இருக்கலாம் அதைப் பெரிதாக எண்ணிக்

(இதன் தொடர்ச்சி 24-ம் பக்கம்பார்க்க)

# கோணலை நிமிர்த்துவோம் தூய்மையைக் காப்போம்

தற்காலத்தில் கிறிஸ்தவ மார்க்கம் பரிசுத்தத்துக்கும் புனிதத் தன்மைக்கும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்று பொது மக்கள் எண்ணும் அளவுக்கு ஒழுக்க நெறிகளைக் கடைப் பிடிப்பதில் மிகவும் மெத்தனமாக இருக்கிறோம். விபச்சாரம், உலக உல்லாசம் சம்பந்தமான படக் காட்சிகள், தொலைக் காட்சிகள், புகை பிடித்தல், மது அருந்தல் போன்றவைகள் ஒரு காலத்தில் மிகக் கடுமையாக விமர்ச்சிக்கப்பட்ட விஷயங்கள். ஆனால் தற்காலத்தில் அதெல்லாம் பெரிய விஷயமல்ல என்று மனதைத் தேற்றிக்கொண்டு கண்டு கொள்ளாமல் விட்டு விடுகிறோம். அதைக் குறித்து வருத்தப்படாமல் இருப்பதோடு அதற்கு ஆவியின் வளர்ச்சி (Spiritual maturity) என்ற முத்திரை குத்தி மகிழ்கிறோம்.

மற்றவர்களுடைய குறைகளைப் பெரிது படுத்தி அசிங்கப்படுத்தக் கூடாது. மற்றவர்களை நியாயம் தீர்க்க நாம் யார்? என்று இயேசு பெருமானே சொல்லியிருக்கிறார் என்றெல்லாம் கூறி ஏதோ இயேசு சொன்ன அனைத்தையும் இம்மியளவும் கூட பிசகாமல் கடைப்பிடிப்ப வர்களைப் போல நடிக்கிறோம்.. போலியாக மன சமாதானம் செய்து கொள்ளுகிறோம்.

'எவனோ என்னமாவது செய்துவிட்டுப் போகட்டும். ஆசீர்வாத மான வசனங்களைத் தேடி வாசித்து அவனைப் புகழ்ந்து பேசி, அவன் தவறான முறையில் ஈட்டிய பணத்தில் உனக்குக் கொடுக்கிற காணிக்கை களை வாங்கிக்கொண்டு ஆசீர்வதித்துவிட்டுப் போய்க் கொண்டேயிரு' இது அனுபவமிக்க, விளம்பரமான ஒரு வரம் பெற்ற போகதர் புதிதாய் ஊழியத்துக்கு வருகிற இளைஞனுக்குக் கூறிய அறிவுரை. அப்போஸ்தல னாகிய பவுல் 'நீங்கள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்த மா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்கும் என்று அறியீர்களா?

ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கும் படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே.

ஆதலால் பழைய புளித்த மாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடும் அல்ல, துப்புரவு; உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம். 1 கொரி 5:6-8

மேற்கண்ட வசனங்களின் மூலம் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு கர்த்தருக்குக் கீழ்படியாமல் பாவங்களில் ஈடுபடுவர்களைக் கண்டித்து உணர்த்த வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார். இதே ஆலோசனையை வேறொரு சந்தர்ப்பத்தில் 'தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொள்ளுங்கள்' என்று ரோமருக்குக் கூறுகிறார். ரோமர் 12:9

**கிறிஸ்தவர்களே!** நாம் நம்முடைய சொந்த வாழ்க்கையிலும், மார்க்கத்திலும் இப்படிப்பட்ட உலகியல் கோட்பாடுகளும், அவலட்சணமான காரியங்களும் உள் நுழைந்து சத்தியமார்க்கத்தை மாசு படுத்தாதபடி விழிப்புடன் இருக்க வேண்டும். கொஞ்சம் புளித்த மா பிசைந்த மா முழுவதையும் புளிக்கச் செய்வது போல் இவ்விதமான பொல்லாத செயல்கள் சபைகளில் ஊடுருவி விசுவாசிகளின் புனிதத் தன்மையை பெரிய அளவில் பாதித்து, 'சத்தியமாவது, உபதேசச் சட்டமாவது, எல்லாம் வேஷம் என்ற' விரக்தி ஏற்பட்டு முடிவில் ஆவியில் செத்த நிலைமை ஏற்பட்டு விடும். பூமிக்கு உப்பாக இருக்கவேண்டிய நாம் 'சாரத் தன்மை' இழந்துபோன உப்பின் நிலைக்குத் தள்ளப்பட்டு, ஏனைய மாந்தர் முன் கேலிப் பொருளாகி விடுவோம். அப்படிப்பட்ட நிலைமை தேவனுக்கும் அருவருப்பானது என்று நாம் அறிவோமாக.

**மந்தையை மேய்த்து கண்காணிக்கும்படி பரிசுத்த ஆவியான வரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியர்களே!**

அப்போஸ்தலர்கள் பவுலும், யாக்கோபும் கூறுவதைக் கவனித்தீர்களா? ஒருவர், 'மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கி, கீழ்ப் படுத்துகிறேன்' என்று பயத்துடன் சொல்லுகிறார். வேறொருவர் 'அதிக ஆக்கினை அடைவோம் என்று அநேகர் போதகர்களாகாதிருப்பீர்களாக!' என்று எச்சரித்து புத்தி சொல்லுகிறார் 1 கொரி. 9:27., யாக். 3:1.

அப்போஸ்லதன் பேதுரு, ஊழியர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுங்காலத்து எப்படி இருக்கக் கூடாது, எப்படி இருக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறுகிறார். கேளுங்கள். 'உங்களிடத்திலுள்ள மந்தையை நீங்கள் மேய்த்து கட்டாயமாய் அல்ல **மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்துக்காக அல்ல - உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாய் அல்ல-மந்தைக்கு மாதிரியாக்வும் கண்காணிப்புச் செய்யுங்கள்** 1 பேது. 5:2-3.

ஆகவே, நம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் இக் கனமான ஊழியத்தை உலகியல் பற்றில் அதிக ஆர்வம் காட்டும் மனிதர்களைப் பிரியப்படுத்துவர்களாக பார்வைக்கு ஊழியம் செய்யாமல், பரிசுத்தமுள்ள பிதாவைய்யும் நமக்காக தன் அந்தஸ்தைத் துறந்து, உயிரையும் கொடுத்த இயேசுகிறிஸ்துவுக்குப் பிரியமாய் நடக்கவும், நடத்தவும் முயலுவோமாக! எபே. 6;6.

E. Z. செல்வநாயகம்

**YOUR ATTENTION PLEASE:**

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9 : 00 to 9 : 15 P. M.
Fridays-7 : 45 to 8 : 00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker : Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9 : 00 to 9 : 15 P. M.
Thursdays-9 : 00 to : 9 : 15 P. M.
Fridays-9 : 00 to 9 : 15 P. M.
Sundays-12 : 45 to 1 : 00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker : Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2 : 30 to 2 : 45 P. M.
Tuesdays-2 : 30 to 2 ; 45 P. M.
Thursdays–2 : 30 to 2 : 45 P. M.
Fridays-2 : 30 to 2 : 45 P. M.
Saturdays-2 : 30 to 2 : 45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker : P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-550084.
Tuesdays-5 : 30 to 5 : 45 P. M.
Thursdays-6 : 45 to 7 : 00 P. M.
Sundays-6 : 45 to 7 : 00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker : P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdays,3 : 45 to 4 : 00 P. M.
Fridays-3 : 45 to 4 : 00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

---

இந்த இதழ் தனிச் சுற்றுக்கு மட்டும்.

## வாசக அன்பர்களே! வணக்கம்

ஆகஸ்டு இதழில் நாங்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, பல அன்பர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்து, 'திருமறை ஆசான்' வளர்ச்சியில் உங்களுக்கு இருக்கும் ஆர்வத்தைத் தெரியப்படுத்தியிருக்கிறீர்கள். மிக்க நன்றி.

நாங்கள் முக்கிய புள்ளிகள் என்று கருதும் சில சகோதர சகோதரிகளிடமிருந்து கருத்துக்கள் வந்து சேரவில்லை. வேலைப் பளு, வெளியூர்ப் பயணம்; இன்ன பிற அசௌகரியங்கள் காரணமாக இருக்கலாம்.

அப்படிப்பட்டவர்களின் சௌகரியத்துக்காக மேலும் சில கிழமைகள் அவகாசம் கொடுக்கலாம் என்று எண்ணி 15–10–88 வரை காலக்கெடு நீடிக்கப்பட்டிருக்கிறது. வாய்ப்பைப் பயன் படுத்தி தங்கள் மேலான கருத்துகளை எழுதி அனுப்பி இதழின் மேம்பாட்டுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி, வணக்கம் ஆசிரியர்

Edited and Published by E. Z. Selvanayagam and Printed by
Sri. Vela E. V Arasamanickam. at Vela Printers, Erode-638 001.
Phone : 74878

PRINTED MATTER

BOOK-POST

TO.

If undelivered please return to ;
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.